தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

சனிக்கிழமை, 1975 மார்ச் 29.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 3 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Kidnappers of Children

*200 *Q.*—THIRU L. BALARAMAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of persons who were arrested during the months of February–March, 1974, in Villupuram area on suspicion that they were kidnappers of children;

(*b*) the number of children who were missing; and

(*c*) whether they were traced?

பிள்ளை பிடிக்கும் கும்பல்.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் பகுதியில் 1974 பிப்ரவரி மார்ச் திங்கள்களில் பிள்ளை பிடிக்கும் கும்பல் எனக்கருதி எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்?

(இ) எத்தனை குழந்தைகள் காணமற் போயின?

(உ) அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனரா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஒருவருமில்லை. (இ) 11 குழந்தைகள் காணமற்போனதாக காவல் துறையினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இப் பதினோறு நேர்வுகளில் ஐந்து நேர்வுகள் ஆதாரமற்றவை என்று தெளிவாகியது.

(உ) ஆம். ஏனைய ஆறு நேர்வுகளில் காணாமல்போன ஆறு குழந்தைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, 6 குழந்தைகள் கண்டு பிடிக்கப்பட்டன என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட குழந்தைகள் கடத்தப்பட்டவர்களா ? அல்லது எங்கு கண்டுபிடிக்கப்பட்டவர்கள் ? கடத்தலிலிருந்து ஏதாவது புலன் தெரியவருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த ஆறு குழந்தைகளைப்பற்றிய விவரங்கள் : செல்வராஜ் என்ற குழந்தை 13 வயது பையன். ராமசாமி என்பவரின் மகன். 20—2—74ல் பள்ளிக்குச் செல்லும்போது மயக்கம் அடையச்செய்து வண்டியிலே கொண்டு செல்லும் போது, மயக்கம் தெளிந்தவுடன் அவன் மலம் கழிப்பதற்கு தன்னை வண்டியிலிருந்து வெளியே செல்ல அனுமதிக்குமாறு கேட்க, பையனை வண்டியிலிருந்து வெளியே அனுப்பியதும் பையன் தப்பிச் சென்று வீட்டை அடைந்தான். 15 வயது இன்னொரு பையன். அவனுடைய பெயர் செல்வராஜ். ரயில்வே காலனியில் வசிக்கும் ஜோசப் என்பவரின் மகன். துணியை மூக்கிலே காண்பித்து மயக்கம் அடையச்செய்து வண்டி யிலே ஏற்றிச்சென்று திருச்சிக்குச் சென்றதாகவும், ஆனால் பையனை மட்டும் வண்டியிலே விட்டு தேநீர் அருந்துவதற்குச் சென்றபோது அவன் தப்பித்து திருச்சியிலிருந்த தன்னுடைய உறவினர் மாமன் வீட்டிலே சென்று இருந்தான். நாசர் 13 வயது பையன், விழுப்புரத்தில் வசிக்கும் பாஷா என்பவருடைய மகன். பையனை பயமுறுத்தி டிராக்டர் டிரெயிலரில் ஏற்றி ஊருக்கு வெளியே போனதும், பையன் மிகவும் சத்தம் போட்டு அழவும், அதனால் அந்தப் பையனை அந்த இடத்தில் இறக்கிவிடவே, பையன் தன்னுடைய வீட்டுக்கு வந்தடைந்தான் என்றும், இதுபோல் பரமசிவன் என்ற பையன் திருச்சி வரையிலே அழைத்துச் செல்லப்பட்டு அவனும் மயக்கம் தெளிந்த பிறகு தப்பிச் சென்று விழுப்புரத்தை வந்தடைந்தான். ஹமீதா என்கின்ற 10 வயது பெண், ஷேக்தாவுத் என்பவரின் பெண். மண்ணெண்ணெய் வாங்குவதற்காக கடைக்குப் போன இடத்தில் கட்பீசை ஒருவர் காட்டவும் மயக்கம் அடைந்து கீழே விழுந்து விட்டாள். அந்தச் செய்தியைக் கேட்டு அவளுடைய தாய் திரும்ப வந்து அழைத்துச் சென்றாள். பிரபாகரன் 17 வயது. 11 வது வகுப்பு படித்துக் கொண்டிருப்பவன். ஒருநாள் மாலையில் ஆஞ்சநேயர் கோவிலுக்குச் சென்றபோது சிலர் முகத்திலே பௌடரைத் தூவியதாகவும், மயக்கம் அடைந்த நிலையிலே சத்தம் போடவே சிலர் ஓடிவரவும், மயக்கம் தெளிந்தவுடன் வீடு வந்து சேர்ந்தான். இப்படி இந்த ஆறு பேர்களைப் பற்றி விவரங்கள் இருக்கின்றன. தென்னார்க்காடு மாவட்டத்திலே போலீஸ் தனிப்பிரிவு ஒன்று குழந்தைகளை மயக்கி எடுத்துச் சென்றவர்களைக் கண்காணிப்பதற்காக நடவடிக்கை எடுத்தது. சந்தேகப்பட்ட ஆறு பேர் களைக் காவலில் வைத்தார்கள். இந்த ஆறு பேர்களில் மூன்று பேர் வட இந்தியாவைச் சேர்ந்தவர்கள். ஒருவர் ஆந்திராவைச் சேர்ந்தவர். இருவர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள்.